5. கவன ஈர்ப்பு

(அ) சுந்தரராஜபுரம் கிராமத்தில் அரிசனங்களின் வீடுகள் தீயினல் எரிக்கப் பட்டதும், நிவாரண நடவடிக்கைகள் குறித்தும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப்பேரவையின் 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியமான காரியம் ஒன்றை திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்கள் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. ஏ. அ. சுப்பராஜ: தலைவரவர்களே, சட்டப்பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். "இராமநாதபுரம் ஜில்லா இராஜபாளையம் சப்-தாலுகா சுந்தரராஜபுரம் கிராமத்தில் வசிக்கும் அரிசன மக்களது 122 வீடுகள் 23—8—1970-ல் தீயினல் எரிந்து அதனல் வீடுகளின்றித் தவிக்கும் அரிசன மக்களுக்கு கொடுக்கவேண்டிய உடனடி நிவாரணமும், நிரந்தரமாக எளிதில் தீப்பிடிக்காத வீடுகள் கட்டிக்கொள்ள தக்காவிக் கடன் அளிப்பதும் பற்றி"

THIRU HON. THIRU K. A. MATHIALAGAN: A fire accident took place at about 2-30 p.m. on 23rd August 1970 in Sundararajapuram village of Rajapalayam sub-taluk, Ramanathapuram district. The fire was purely accidental. In the fire accident 117 houses belonging to the poor Harijans were destroyed by fire. Besides this, two grocery shops, one tailoring shop and one cattle shed were completely destroyed. There was no loss of human life, but five persons sustained minor injuries and were admitted in the Government hospital at Rajapalayam. Their condition is not serious and they are progressing now. Also, one cow, three goats and ten hens were burnt to death. The total loss is estimated at Rs 55,342.00. The Collector of Ramanathapuram sanctioned a sum of Rs. 9,120 towards cash and clothing relief to the 117 families affected by the fire accident.

The Deputy Tahsildar, Rajapalayam made local arrangements for free distribution of rice to the victims, whose houses were destroyed by fire. No proposal for the grant of Thakkavi loans to the fire affected victims, for the construction of permanent fire-proof tenements has been received by the Government.

The Collector of Ramanathapuram has also recommended the sanction of a sum of Rs. 1,260 as a special relief towards the payment of cash relief to the 42 families at the rate of Rs. 30 per house for re-thatching the roofs of their houses, which were dismantled as a precautionary method to arrest the spreading of fire and the matter is under consideration of the Government.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவரவர்களே, இந்த தக்காவி லோன் கொடுப்பது சம்பந்தமாக அங்கே பஞ்சாயத்திலே புல் பைனன்ஸ் ஸ்கீமாக இருந்தால்தான் கொடுப்பதற்கு இல்லை. ஸ்பெஷல் கேசாக இருந்தால் கொடுக்கலாம் என்று இருக்கிறது. அங்கே இருக்கும் அரிசன மக்கள் அன்றாடம்

உழைக்கக் கூடியவர்கள். குறைந்தபட்சம் ரூ. 1,000 கொடுத்தால்கூட நல்ல விதத்தில் சௌகரியமாக இருக்கும். அங்கே இதற்கு முன்பு ஸ்பெஷல் கேஸ் என்று சொல்லி பஞ்சாயத்திலே ரூ. 100, 200 தக்காவி லோன் கொடுத்திருக்கிறார்கள். தயவுசெய்து நிதி அமைச்சர் அவர்கள் ஏதாவது பரிகாரம் கொடுத்து தக்காவி போல் ஸ்பெஷல் கேஸாகக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அது அரசாங்கத்தைப் பொறுத்த பிரச்னை அல்ல. அது கொள்கை அளவில் உள்ள பிரச்னை. இப்படி தக்காவி லோன் கொடுக்க ஆரம்பித்தால் நிதி நிலைமை சரி இருக்காது. அப்படிக் கொடுக்கும் உத்தேசம் அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் இல்லை.

(ஆ) பொத்தக்காலன்விளை கிராமத்தில் ஏற்பட்ட தீ விபத்தினால் மக்கள் பாதிக்கப்பட்டது குறித்து.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"நெல்லை மாவட்டம் திருச்செந்தூர் தாலுக்காவில் சாத்தான்குளம் தொகுதியிலுள்ள பொத்தக்காலன்விளை கிராமத்தில் 26-8-1970-ல் பெரும் தீ விபத்து ஏற்பட்டு ஏராளமான வீடுகள் எரிந்தும், மிகுந்த பொருட் சேதம் ஏற்பட்டும் அப்பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்".

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, a fire accident took place at 10 a.m. on 26th August 1970 in Pothakalanvilai, hamlet of Santhavinallur village. Sathankulam sub-taluk, Tirunelveli district. The fire accident was purely accidental. In the fire accident, eight houses were destroyed. All the eight victims are reported to be coolies. There was no loss of human lives or cattle in the fire accident. The total estimated loss of the eight victims are reported to be Rs. 4,000. A cash grant of Rs. 80 has been sanctioned to each of the eight victims of the fire accident.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிராமத்தில் இந்தத் தீ விபத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் பெரும்பாலோர் அகதிகள். இலங்கையிலிருந்து இங்குவந்து பனைமரத் தொழிலை செய்யக்கூடியவர்கள் ரொம்ப அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தினால், சாதாரணமாக கொடுக்கக்கூடிய ரூ. 80 என்பதை கொஞ்சம் அதிகமாக்கி, இவர்கள் இலங்கையிலிருந்து வந்த அகதித் தொழிலாளர்களாக இருக்கிற காரணத்தை வைத்து, முதல் அமைச்சர் அவர்களின் க்ஷேமநல நிதி அல்லது வேறு நிதியிலிருந்து உதவி செய்வதற்கு நிதி அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : We need not club the rehabilitation of Ceylon repatriates with the fire accident. We can consider it separately.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஏ. எம். ராஜா அவர்கள் இருக்கையில் இல்லை. ஆகவே, அடுத்த தீர்மானத்தை எடுத்துக்கொள்கிறேன்.